RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijmrd2223S125

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

# Tamil Business Ethics and Changes Over Time

# தமிழரின் வணிக நெறிகளும் கால மாற்றங்களும்

**S. Banumathi** [a,*]

[a] Department of Tamil, Mahalakshmi College of Arts and Sciences for Women, Paruthipattu, Avadi, Chennai-600071, Tamil Nadu, India.

*Corresponding author Email: banusekar2003@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S125

Received: 13-04-2022; Revised: 13-07-2022; Accepted: 18-07-2022; Published: 19-08-2022

**Abstract:** Food is one of the basic needs for human life. Agriculture has been seen as the primary occupation in Tamil life since the earliest times. A system of selling manufactured goods through barter was observed. Business is the basis of the economic development of the country. Merchants were called by their profession. The currency of the barter system evolved systematically in response to the time environment and demand. During the Sangam period, merchants who were respected by the king acted with neutrality, so the development of trade was carried out with two main divisions, namely sea trade and land trade. Markets also led to trade, especially in export and import modes. The way business was conducted during the British rule, the development of business in modern times, and in today's e-commerce service, led to various changes, using various strategies, the business has been working very well according to the development of the country and the needs of the time.

**Keywords:** Business, Merchant Integrity, Barter, Maritime Business, Land Trade

**Language:** **Tamil**

## முன்னுரை

மனிதன் வாழ்வதற்கு அடிப்படைத் தேவைகள் மூன்று. அவை உணவு, உடை, உறைவிடம் ஆகும். நீரின்றி எவ்வாறு உலகம் அமையாதோ அதுபோல் உணவின்றியும் மனிதனால் வாழ முடியாது. மனிதன் வாழ்வதற்கு அத்தியாவசிய தேவையாக உணவு அமைகிறது. தமிழர் வாழ்வில் தொடக்க காலம் முதலே வேளாண்மை என்பது முதன்மைத் தொழிலாக காணப்படுகிறது. மனிதன் உற்பத்தியில் தேவையானதை எடுத்துக்கொண்டு எஞ்சியவற்றை பிறருக்குக் கொடுக்கும் பண்டமாற்று முறையே தொடக்ககால வணிகமாக அமைந்திருந்தது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடுவதும் வணிகமே ஆகும். இதனைக் கருத்தில் கொண்டு தமிழரின் வணிக நெறிகளும் கால மாற்றங்களும் எனும் தலைப்பின் கீழ் பின்வருமாறு ஆராயலாம்.

## வணிகம்-தோற்றம்

மனிதனுடைய அடிப்படைத் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவதுதான் வணிகம் என்பர். சங்க காலத்தில் வழிவழியாக வாணிபம் செய்வோரை வைசியர் என அழைத்தனர் இதனை தொல்காப்பியர்

“வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை”

எனக்குறிப்பிடுகிறார் (Shanmugam Pillai, 2007). மேலும் அவர்கள் செய்யும் தொழிலை வைத்தே அழைக்கும் முறையும் சமுதாயத்தில் காணப்பட்டது கூலவணிகர், பொன் வணிகர், அறுவை (துணி) வணிகர், மணி வணிகர், சேனை வணிகர் என அழைக்கப்பட்டனர். இக்காலத்திலும் இந்த நடைமுறை வழக்கத்தில் உள்ளதைக் காணலாம். வாழ்க்கைப் பொருளால் ஆனது. இதனை உணர்ந்த சங்ககால

மக்கள் வினையே ஆடவர்க்கு உயிர் என்றனர். பொருள் ஈட்டுவதற்காகத் தலைவன் குடும்பத்தைப்பிரிந்து பல நாட்கள் பயணம் செய்து தனக்குத் தேவையான பொருளை ஈட்டிய பின்னரே தம் இல்லத்திற்கு திரும்பும் வாழ்க்கை நிலையைக் காணமுடிகிறது

"பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு"

என்ற குறள் வழி பொருள் இல்லை என்றால் இவ்வுலகில் இன்பமான வாழ்வு வாழ முடியாது என்பதை நம் முன்னோர்கள் அறிந்திருந்தனர் (Manickam, 2005). பண்டமாற்று முறையில் தொடங்கிய வணிகம் பின்னாளில் மக்களின் தேவைக்கும் காலச் சூழலுக்கும் ஏற்றவாறு நாணய முறை வணிகமாக வளர்ச்சி அடைந்தது.

## வணிகத்தில் வணிகரின் நேர்மை

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு வணிகம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. வணிகம் சரியான முறையில் நடைபெறவில்லை என்றால் நாட்டின் வளர்ச்சியானது மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகும். சங்க காலம் பொற்காலமாகத்திகழ்ந்ததற்குக் காரணம் வணிகம் சிறப்பான முறையில் நடைபெற்றதே ஆகும்

“வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்

பிறவும் தம்போல் செயின்”

வணிகர் தான் விற்கும் பொருளை தன் பொருள் போல் கருதி, அளவான இலாபத்துடன் எடை குறையாது விற்க வேண்டும் அதுவே சிறந்த வியாபார முறையாகும் (Manickam, 2005). அறநெறியில் பொருள் ஈட்டுவதையே முதன்மை நோக்கமாகக் கொண்டு அவர்கள் செயல்பட்டனர். வணிகத்தில் இலாபமானது எடையில் மட்டுமல்ல, இலாபத்திலும் நேர்மை இருக்க வேண்டும் என விரும்பினர். இதனை

"கொள்வதூஉம் மிகை கொடாது

கொடுப்பதூஉம் குறை கொடாது

பல் பண்டம் பகர்ந்து வீசும்

கொண்டி துவன்று இருக்கை”

சங்க காலத்தில் வணிகர்கள் இலாப நோக்கத்திற்காக அளவுக்கு அதிகமாக பொருளை பதுக்கி வைக்காமலும், நுகர்வோருக்குக் கொடுப்பதைத் தரமானதாகவும் நியாயமான முறையிலும் வழங்கி வணிகத்தை மேற்கொண்டனர் என்பதை இப்பாடல் வரிகள் நமக்கு உணர்த்துகிறது (Ilaya Bharathi, 2012). இக்காரணங்களால் அரசனுக்கு அடுத்த நிலையில் சமுதாயத்தில் செல்வாக்கு மிக்கவர்களாக வணிகர்கள் திகழ்ந்தனர் பண்டையக்காலத்தில்வணிகத்தில் சிறந்து விளங்கியவர்க்கு எட்டிப் பட்டம் கொடுத்துச் சிறப்பித்தனர். சமுதாயத்தில் அவர்களின் குடும்பத்தினருக்கு மதிப்பும் மரியாதையும் வழங்கப்பட்டது.

## வணிகத்தின் வகைகள்

நாட்டில் செல்வ வளம் பெருகவும், மக்களின் தேவைக்கேற்ப பொருள்களின் உற்பத்தி அதிகரிக்கவும் மிக முக்கிய இரண்டு வழிகளில் வணிகம் நடைபெற்றது. இதனை கடல் வழி வணிகம், தரைவழி வணிகம் என வகைப்படுத்துவர். பொருட்களின் உற்பத்திப் பெருக்கத்தின் காரணமாக பரிவர்த்தனைகள் நில வழியும், நீர் வழியும் பெரும்பாலும் நடைபெற்றது. பண்டையக் காலத்தில் உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருட்கள் பெரும்பாலும் பண்டமாற்று முறையிலேயே விற்பனையானது.

## கடல்வழி வணிகம்

திரைக்கடல் ஓடியும் திரவியம் தேடு என்றார் அவ்வையார். பண்டையக்காலத்தில் தமிழர்கள் உற்பத்தி செய்த பொருட்களை விற்பனை செய்வதற்கும், அயல்நாடுகளுக்குத் தொழில் சார்ந்த

பயணத்தை மேற் கொள்வதற்கும் கடல்வழிப் பயணத்தை தமிழர்கள் தேர்ந்தெடுத்தனர். முதன்முதலில் நீரின்மேலே ஓடும் மரக்கலங்களைத் தமிழ்நாட்டில்தான் செய்தனர். கட்டுமரம் முதல் கப்பல் வரை பல வகைக் மரக்கலங்களைத் தமிழர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

"கலம் செய் கம்மியர் வருகெனக் கூஉய்

இலங்கு நீர்ப் புணர் ஏறிகரை எய்தி

வங்கம் ஏறினன்"

சிறந்த முறையில் செய்ய வல்லவர்களாகிய கம்மியர்களைக் கொண்டு செல்வவளம் நிரம்பப்பெற்ற செல்வந்தர்கள் மரக்கலங்களை அமைத்தனர் என்பதை பல இலக்கியங்கள் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றன (Kodhantam, 2007). கடலைப் பிளந்து கொண்டு செல்லக்கூடிய மிகப்பெரிய மரக்கலங்களை தமிழர்கள் பயன்படுத்தியுள்ளனர். கப்பல் குறித்த செய்திகளும், குறிப்புகளும் இலக்கியங்களில் காணப்படுகின்றன. கடல் வழியாக வரும் பொருட்களைக் பாதுகாக்க துறைமுகங்கள் அமைக்கப்பட்டன. துறைமுகங்கள் அருகே பண்டகச்சாலைகள் அமைத்து, உணவுப் பொருட்களைப் பாதுகாத்தனர். இதனை

"ஒருங்கு தொக்கன்ன உடைப் பெரும் பண்டம்

கலத்தினும் காலினும் தருவன ரீட்டக்"

ஓர் இடத்தில் சேமித்து வைக்கப்பட்ட பண்டங்களை, நாட்டு மக்களுக்கும் வழிப்போக்கர்களுக்கும் வழங்கி மகிழும் மன்னர்களை இலக்கியங்களில் காணலாம் (Sri Chandran, 2009). உலகமே திரண்டு வந்தாலும் உணவு பொருட்களைக் குறையாது வழங்கும் தன்மையுடைய மன்னர்கள் நம் நாட்டில் காணப்பட்டனர். இப்பெருமைக்குக் காரணம் கொற்கை, தொண்டி, புகார், முசிறி போன்ற மிகப்பெரிய துறைமுகங்களை மூவேந்தர்களும் வைத்திருந்ததே ஆகும்.

நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தரமான பொருட்களை ஏற்றுமதி செய்து வருவாய் ஈட்டும் முறையை இன்றும் நாம் கடைப்பிடித்து வருகிறோம். ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு சுங்க வரி வசூலிக்கும் முறைப் பண்டையக் காலத்திலும் காணப்பட்டது

"புலி பொறித்துக் புறம்போக்கி"

சுங்க வரி வசூலித்த பொருட்களின் மேல் அந்நாட்டு மன்னர்களின் சின்னம் பொறிக்கப்படுவதை இப்பாடல் வரிகள் சுட்டுகின்றன (Ilaya Bharathi, 2012). ஒவ்வொரு துறைமுகத்திலும் வழி காட்டுவதற்கும், பாதுகாப்பு நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கும் கலங்கரை விளக்கங்கள் அமைத்திருந்தனர் துறை நகரங்கள் எல்லாம் பட்டினம் என அழைக்கப்பட்டன. எகிப்து, சீனா போன்ற அயல் நாடுகளுடன் வணிகத் தொடர்பில் சிறந்து விளங்கினர் தமிழ்நாட்டிலிருந்து தேக்கு, மயில், தோகை, அரிசி, சந்தனம், போன்றவை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டும், சீனாவிலிருந்து பட்டும், அரேபியாவிலிருந்து குதிரையும் இறக்குமதி செய்யப்பட்டன.

## தரைவழி வணிகம்

ஒரு நாட்டின் உயர்வுக்குக் காரணமாக அமைவது உழவுத் தொழிலே ஆகும். உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு, நாட்டின் அமைதியைச் சீர் குலைப்பதுடன் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலைக்கு அந்நாட்டைக்கொண்டு செல்லும், ஆகவேதான் உலக இயக்கத்திற்கு முதன்மையானது உழவே இதனை

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்

தொழுதுண்டு பின் செல்பவர்"

என்கிறார் வள்ளுவர் (Manickam, 2005). உழவு செய்து அதனால் கிடைக்கும் பொருளைக் கொண்டு வாழ்கின்றவரே உரிமையோடு வாழ்வார். மற்றவர் எல்லோரும் பிறரைத் தொழுது உண்டு பின் செல்கின்றவரே என்கிறார். தரை வழி வணிகம் பெரும்பாலும் பண்டமாற்று முறையிலேயே நடந்தது. திணை அடிப்படையில் பகுத்து வாழ்ந்த நம் முன்னோர்கள் அந்தந்த நிலத்தில் விளைந்த பொருட்களை

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற பொது நோக்கத்துடன், எருது, குதிரை, கோவேறு கழுதை போன்றவற்றில் ஏற்றிக்கொண்டு நெடுதூரம் பயணம் செய்து வாணிபம் செய்தனர் பயணத்தின் இடையே காடுகளையும் கடந்து செல்ல வேண்டி இருந்ததால் பல இடர்பாடுகளையும் வணிகர்கள் சந்தித்தனர மக்களின் மிக முக்கிய உணவாக கருதப்படுகின்ற நெற்பயிர்கம்பு, மிளகு, சோளம், பருப்பு வகை இவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தனர் .ஏற்றுமதி இறக்குமதி வணிகமும் சிறந்த முறையில் நடைபெற்றது. வணிகருக்கு சாத்தன், சாத்துவன் என்னும் பெயர்கள் வழங்கப்பட்டன. நிலம், நீர் ஆகிய இரு இடங்களிலும் கிடைத்த பொருட்களான அழகிய மணிகள், முத்துக்கள், பொன் ஆகியவற்றை பிற இடங்களுக்கு சென்று விற்றனர். உப்பை நெல்லுக்கு விற்கும் பழக்கமும் அக்காலத்தில் இருந்தது.

"பல்வேறு புள்ளின் இசை எழுந்தற்றே

அல் அங்காடி அழிதரு கம்பலை" (Narayana Velupillai, 2003)

பெரும் நகரங்களில் நாளங்காடி, அல்லங்காடி போன்ற பொருள் விற்பனை செய்யும் கடைகள் இருந்ததாகவும், அவை மக்களுக்கு சிறந்த முறையில் பொருட்களை விற்பனை செய்கின்ற நிலையமாகவும் திகழ்ந்தது மதுரை போன்ற பெரு நகரங்களில் இவ்வகை வணிகம் சிறந்த முறையில் நடைபெற்றதற்கான சான்றுகள் பல இலக்கியங்களில் காணப்படுகின்றன

இன்றும் நாம் பெருநகரங்களில் காணப்படும்கடைத்தெருகள் இரவு நேரங்களில் ஆரவாரத்துடன் செயல்படுவதைக் காணலாம்.

## ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் வணிகம்

மிதி வண்டியின் சக்கரம் எவ்வாறு மேலும்கீழும் சுழல்வது போல் பல நூற்றாண்டுகளைக் கடந்தும், பல ஆட்சியாளர்களைக் கடந்தும் வாணிபம் மட்டும் தொய்வில்லாமல் நடை பெற்றது எனலாம். ஆங்கிலேயர்கள் நம் நாட்டிற்கு வாணிபம் செய்வதற்கு வருகைப் புரிந்த பின் கப்பல் பயணம் எளிதானது. விரைந்த போக்குவரத்து வசதிகளும், தகவல்தொழில்நுட்ப வசதிகளும் உலக வாணிபம் ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டுக்குள் வருவதற்கு வாய்ப்பாக அமைந்தது. குதிரை மேல் செய்யும் வாணிப பயணங்கள் நலியத் தொடங்கியது. வாணிபம் செய்வதற்காக இந்தியாவிற்குள் இரயில், விமானம் போன்ற போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டு திறம்பட செயல்பட தொடங்கியது இந்தியா வாணிபம் செய்யும் இடமாக மாறினாலும், இலாபங்கள் அனைத்தும் ஆங்கிலேயர்களயே சென்று சேர்ந்தது. வருமானம் பெருக்கும் இடமாக இந்தியா மாறியது. இந்தியா விடுதலை அடைந்த பின் பொருள்களின் விற்பனையில் பல மாற்றங்களும், ஏற்ற இறக்கங்களும் காணப்பட்டன.

## தற்காலத்தில் வணிகத்தில் வளர்ச்சி

சுதந்திர இந்தியாவில் வணிகத்தின் வளர்ச்சியானது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப் பெரும் உதவியாக காணப்பட்டது. இன்றைய வணிக வளர்ச்சியில் சிறிய அளவில் முதலீடு செய்து, அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற சிறு வணிகமும், பெரும் முதலீட்டில் பெருந் தொகையை முதலீடு செய்யும் பெரும் வணிகர்களும் நிறைந்து காணப்படுகின்றனர். அதனால் இன்றைய வணிகமானது மாற்றங்களையும், முன்னேற்றங்களையும் உள்ளடக்கியதாக விளங்குகின்றது.

## இணைய வழி வணிகம்

வேகமாக சுழன்று வரும் உலகம் என்பதால் மக்கள் நேரடியாகக் கடைகளுக்கு சென்று பொருட்களை வாங்க பலருக்கு இங்கு நேரமில்லை. நேரத்தை மிச்சப்படுத்தும் நோக்கத்துடன் வணிக நிறுவனங்கள் இணையவழி சேவையைத்தொடங்கியுள்ளன. அதில் விற்பனை செய்யப்படும் பொருளின் தரம், விலை, திறன் போன்றவற்றை வெளியிடும், பிற நிறுவன பொருட்களுடன் அப்பொருளின் தரத்தை ஒப்பிட்டு பார்க்கவும் வசதி வாய்ப்புகள் செய்யப்பட்டுள்ளன. வீட்டிலிருந்தபடியே பொருட்களை இணையத்தில் வாங்கும் நுகர்வோருக்கு, அப்பொருள் தரம் திருப்தியளிக்கவில்லை என்றால் அதை திருப்பி அளிக்கவும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இன்றைய மக்களின் தேவைகளை உணர்ந்து வணிக நிறுவனங்கள் மின்னணு பரிமாற்ற முறையை வணிகத்தில் புகுத்தி புதுமை செய்து வருகிறது.

## முடிவுரை

பொருட்களின் தேவை மக்களுக்கு இருக்கும் வரை வணிகமும் காலந்தோறும் தவிர்க்க முடியாத ஒன்றாகத் விளங்குகிறது. வேதகாலம் முதல் இன்றைய நவீன காலம் வரை பல்வேறு மாற்றங்களையும், முன்னேற்றங்களையும் கண்டுள்ளது வணிகம். பெருநகரங்களில் நாளங்காடி, அல்லங்காடி போன்ற கடைகள் பகல் இரவு என்று இடைவிடாது செயல்பட்டாலும், நவீன காலத்திற்கு ஏற்ப இணையவழியில் 24 மணி நேரமும் இடைவிடாது வணிக சேவை நடைபெறுவதை நாம் காணலாம். இன்னும் வரும் காலங்களில் இவ்வணிகச் சேவையானது பலவித மாற்றங்களை சமுதாயத்திற்கு தந்து, நாட்டின் வளர்ச்சிக்கு மிக முக்கிய பங்கு வகிக்கும் என்பதில் ஐயமில்லை.

## References


Ilaya Bharathi, (2012) Pattinapalai, Generic publication, Chennai, India.

Kodhantam, Ko.Ma., (2007) Chithalai Chathanarin Manimekalai, gangai Pathipagam, Chennai, India.

Manickam, A., (2005) Thirukkural, Manivaasagar Pathippagam, Chennai, India.

Narayana Velupillai, M., (2003) Pathu pattu-2, Mulai niliyam, Chennai, India.

Shanmugam Pillai, M., (2007) Tholkappiyam, paari niliyam, Chennai, India.

Sri Chandran, J., (2009) Ilango Adigalin Silappathikaaram, Vardhamanan Pathippagam, Chennai, India.



### Funding

No funding was received for conducting this study.


### Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.


### About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License



### Cite this Article

S. Banumathi, Tamil Business Ethics and Changes Over Time, Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 126-130. DOI: https://doi.org/10.54392/ijmrd223125